ஜூலை - 27

# TNPSC துளிகள்

- மும்பை, நொய்டா மற்றும் கொல்கத்தாவில் மூன்று புதிய இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆய்வகங்கள் கட்டப் பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## டிபி சிங் குழு

- பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவரான டி பி சிங் தலைமையில் மத்திய மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சர் ஒரு குழுவை அமைத்துள்ளார்
- வெளிநாட்டிலிருந்து இந்தியாவில் அதிகமான மாணவர்கள் தங்கி, அவர்களின் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வேண்டிய வழிகாட்டுதல்களை உருவாக்குவதே இக்குழுவின் நோக்கம் ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## கோவிட் - 19 சட்ட ஆய்வகம்

- உலக சுகாதார அமைப்பு பிற முக்கிய அமைப்புகளுடன் இணைந்து கோவிட்-19 சட்ட ஆய்வகத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பதிலளிக்கும் வகையில் நாடுகள் நடைமுறைப் படுத்தியுள்ளச் சட்டங்களின் ஒரு தரவுதளமாகும்.
- ஒரு உலகாளாவிய தொற்றுநோயை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் எந்த அளவிற்குப் பயன் தருகிறது அல்லது பயன் தரவில்லை என்பதை அறிய உதவிடுவதைப் படிக்கத் தொடங்குவதற்கான முதல் முயற்சி இதுவாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம், உலக சுகாதார அமைப்பு, எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்டம் மற்றும் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய மற்றும் உலகளாவிய சுகாதாரச் சட்டத்திற்கான ஓ'நீல் நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டுத் திட்டமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## முதலாவது உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழா

- உலகின் மிகப்பெரிய உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழாவின் (FInTech) முதல் பதிப்பானது இணைய வழியில் நடத்தப் பட்டது.
- இதை இந்தியக் கொடுப்பனவு குழு (Payments Council of India) மற்றும் இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகத்தின் (National Payments Corporation of India) நிதித் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இதன் கருப்பொருள் “நிதித் தொழில்நுட்பம்: கோவிட் தொற்றுக்கு முன் மற்றும் கோவிட் தொற்றுக்குப் பின்” என்பதாகும்.
- உலகளாவிய நிதித் தொழில்நுட்பம் மற்றும் வங்கிச் சேவைகள், நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறையை ஒன்றிணைப்பதே இந்த விழாவின் நோக்கமாகும்.




## பொது நிதி விதிகள் 2017

- பொது நிதி விதிகள் 2017 என்ற விதிகளை மத்திய அரசானது திருத்தியுள்ளது.
- இது தேசியப் பாதுகாப்பு அடிப்படையில் இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளிடமிருந்துப் பொதுக் கொள்முதல் செய்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கவிருக்கிறது.
- இந்த உத்தரவானது தனியார் துறையின் கொள்முதலைத் தவிர்த்து இதர அனைத்து வகையான பொதுக் கொள்முதல்களுக்கும் பொருந்தும்.

## நாணய மாற்று ஒப்பந்தம் (Swap Agreement)

- 2022 நவம்பர் வரையில் இலங்கைக்கு 400 மில்லியன் டாலர் அளவிற்கு நாணய மாற்று வசதிக்கு ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் ஒப்புக் கொண்டுள்ளது.
- இது சார்க் நாணய மாற்றுக் கட்டமைப்பின் கீழ் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- தற்போதைய சார்க் நாணய மாற்று ஒப்பந்தம் 2019 டிசம்பரில் கையெழுத்தானது.

- இந்த ஒப்பந்தம் 2022 வரை நீடிக்கும்.
- இரு நாடுகளுக்கும் இடையிலான நாணய மாற்றம் என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நாணயங்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆஸ்ட்ரோஸ் திட்டம்

- நாசாவானது டிசம்பர் 2023 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவிலிருந்து ஆஸ்ட்ரோஸ் திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இது அந்தக் கண்டத்திற்கு மேலே உள்ள காற்றோட்டங்களைக் கண்காணித்திட மூன்று வாரங்கள் வரை அங்கு அவதானிக்க உள்ளது.
- ஆஸ்ட்ரோஸ் என்பது துணை மில்லிமீட்டர் அலைநீளங்களாக உயர் நிறமாலை பிரிதிறன் கண்காணிப்புக்கான ஒரு வானியற்பியல் வளியடுக்கு மண்டலத் தொலைநோக்கி ஆகும்.
- இது ஒரு கால்பந்து மைதானத்தின் அளவிலான பலூன்களை வளி அடுக்கு மண்டலத்திற்கு (stratosphere) அனுப்பும்.
- இது பூமியிலிருந்து கண்ணுக்குத் தெரியாத ஒளியின் அலைநீளங்களைக் கண்டறியும்.
- இந்தப் பலூனானது ஹீலியத்தால் நிரப்பப்பட உள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## பசுமை மீட்பு

- ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பசுமைக் காலநிலை நிதியம் ஆகியவை “பசுமை மீட்புக்கு” பங்காளராக இணைய ஒப்புக் கொண்டன.

- கோவிட்-19 தொற்றுநோயால் கடுமையான பொருளாதாரத் தாக்கத்தை எதிர் கொள்ளும் மக்களுக்கு இது உதவும்.
- பசுமைக் காலநிலை நிதி என்பது வளரும் நாடுகளின் காலநிலை மாற்றத்தைப் பாதிக்கும் பசுமை இல்ல உமிழ்வுகளைக் குறைக்க உதவும் உலகின் மிகப்பெரிய ஒரு நிதியாகும்.




## மத்திய தரைக்கடலில் எண்ணெய்க் கசிவு

- பிரஞ்சுப் பகுதியின் மத்தியதரைக் கடலில், கடல்வாழ் பகுதியில் ஓர் ஆரஞ்சு-பழுப்பு நிற ரசாயனம் பரவியுள்ளது.
- அமெரிக்காவிற்குச் சொந்தமான இரசாயன நிறுவனமான கெம்-ஒன் என்ற நிறுவனம் 200 கேலன் அளவிற்கு அயன்-குளோரைடை (iron chloride) கடலில் கசிய விட்டுள்ளது.
- அட்லாண்டிக் பெருங்கடலுடன் இணைக்கப்பட்டுள்ள இக்கடல் முற்றிலும் நிலத்தால் சூழப் பட்டுள்ளது.
- சூயஸ் கால்வாயானது செங்கடலையும் மத்திய தரைக்கடலையும் இணைக்கிறது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★